**சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்**

அசல் வழக்கு எண்.597/2024 நாள்-22.09.2025

**வா.சா.1-வீராச்சாமி**

**<u>வா.சா.1-ன் குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பில்</u>**

இந்த வழக்கை நான் தாவா சொத்தை கிரையம் முடிக்க உத்தரவிடவேண்டும் எ ன்று தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதி என் மனைவியின் உடன்பிறந்த சகேதாரி என்றால் சரிதான். தாவா சொத்தானது என் மனைவிக்கும் பிரதிவாதிக்கும் வாசாஆ.1 பாகப்பிரிவினையின் படி பிரதிவாதியின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் சரிதான். பிரதிவாதி தாவா ொசத்தில் உணவகம் என்ன பெயரில் எப்போதில் இருந்து நடத்தி வந்தார் என்ற விவரங்களை வழக்கிலும் , முதல்விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதி வழக்கு சொத்தை எப்போது எங்கு வைத்து கிரையம் கொடுக்க விரும்புவதாக வழக்குரையிலும், நிருபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் எங்கு வைத்து எழுதப்பட்டது , பணம் எவ்வாறு எங்கு வைத்து கொடுக்கப்பட்டது என்று வழக்குரையிலும், நிருபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை நான் தெரிந்து கொண்டேன். வழக்கிறஞர் அறிவிப்பில் நானும், பிரதிவாதியும் கிரைய ஒப்பந்தம் 15.04.2023 என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்குரையில் கிரைய ஒப்பந்தம் 17.04.2023 அன்று மேற்கொள்ளப்பட்டதாக காட்டடப்பட்டுள்ளது என்றால் சரிதான். கிரைய தொகை ரூ6,00,000/- என்று பேசிமுடித்தோம். ரூ5,00,000/- கிரைய முன்பணமாக நான் கொடுத்தேன். கிரைய ஒப்பந்தம் நிறைவேற்றும் காலம் 9 மாதம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரூ5,00,000/- முன்பணம் கொடுத்தற்காக பிரதிவாதியிடம்இருநது

தாவா சொத்தின் மூல ஆவணங்கள் மற்றும் வேறு ஆவணங்களை பெறவில்லை. ரூ5,00,000/- கொடுக்கும் போது பிணையத்திற்காக ஆவணம் பெற்றுக் கொள்ளவார்கள் என்றும், நான் கிரைய ஒப்பந்தம் மேற்கொள்ளாததால் ஆவணங்கள் பெறவில்லை என்றால் சரியல்ல. ரூ5,00,000/- கொடுக்கும் போது நான் என்ன வேலை பார்த்தேன் என்றும், எனக்கு வருட வருமானம் எவ்வளவு என்று என் வழக்குரையிலும், நிருபணவாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். என் வருமானத்தைகாட்டக்கூடிய ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை . ரூ5,00,000/- கொடுக்கும் போது என் கைவசம் ரூ5,00,000/- இருந்தது என்று காட்டுவதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் சேமித்து வைத்திருந்த பணத்தை கொடுத்தேன். நான் சேமித்து வைத்திருந்தாக கூறுவது வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் கிரைய ஒப்பந்தம் செய்யும் போது ரூ5,00,000/- ரொக்கமாக கொடுத்தேனா அல்லவது வங்கி பரிவர்த்தனை முலமாக கொடுத்தேனா என்று என் வழக்குரையிலும் நிருபணவாக்குமூலத்திலும குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை செய்து வருகிறேனா என்றால் அரிசிவிற்பனை கமிஷன் பெற்று தொழில் செய்து வருகிதறேன். அரிசி விற்பனைக்கு கமிஷன் பெற்று வருகிறேன் என்று வழக்குரையிலும், நிருபணவாக்கமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன் என்றும், எனக்கு ரூ.5,00,000/- கொடுப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லை எ ன்றால் சரியல்ல. ரூ5,00,000/- கொடுத்தவுடன் ரூ1,00,000/- கொடுப்பதற்கு 9 மாத கால அவகாசம் எதற்கு எ ன்றால் பிரதிவாதி கேட்டுக் கொண்டதால் கால அவகாசம் வழங்கப்பட்டது. இந்த விவரத்தை என்று வழக்குரையிலும், நிருபணவாக்கமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். நான் நாளது தேதி வரை பாதி கிரை ய தொகை ரூ1,00,000/-நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என் கைவசம் ரூ1,00,000/- இல்லை என்பதால் தான் நாளது தேதி வரை

நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்குரையிலும், நிருபணவாக்கமூலத்திலும் பிரதிவாதி எந்த தேதியில் உணவகத்தை நிறுத்தி விட்டார் என்று தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். வழக்குரையிலும், நிருபணவாக்கமூலத்திலும் எந்த தேதியில் பிரதிவாதி உணவகம் விற்பனைக்கு என்று அறிவிப்பு ஒட்டியிருந்தார் என்று தேதி குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான் . கிரைய பத்திரம் முடிக்க தயாராகவும், விருப்பமாகவும் இருப்பதாகவும் எங்கு வைத்து யார் முன்பாக எந்தெந்த தேதிகளில் கேட்டேன் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். கிரைய ஒப்பந்தம் செய்வதற்கு உறவினர் முன்பாக பேச்சுவார்த்தை நடத்திவில்லை என்றால் பிரதிவாதியும், அவரது மருமகனும் வந்தார்கள் இந்த விவரத்தை நான் வழக்கில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான். 05.01.2024 அன்று தான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதை 06.01.2024 அன்று பிரதிவாதி பெற்றுக் கொண்டார் என்றால் சரிதான். 06.01.2024 அன்றிலிருநது 1 வாரத்திற்குள் இந்த வழககை தாக்கல் செய்துவிட்டேன் என்றால் சரிதான். பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்புவதற்கு நான் கால அவகாசம் கொடுக்கவில்லைஎன்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தம் தட்டச்சு செய்யப்ட்டது. கிரைய ஒப்பநதம் யாரால் தயார் செய்ப்பட்டது என்றால் பிரதிவாதி தயார் செய் து கொண்டு வந்ததால் எனக்கு தெரியாது. கிரைய ஒப்பநதம் எத்தனை பக்கம் கொண்டது என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பநதத்தில் நான் எத்தனை கையெழுத்துபோட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. கிரைய ஒப்பந்தத்தில் பிரதிவாதி எத்தனை கையெழுத்துபோட்டேன் என்று எனக்கு ஞாபகம் இல்லை. நான் சொல்வது போன்று கிரைய ஒப்பந்தம் பிரதிவாதி செய்யவில்ாலை என்றும் அதனால் தான் நானும் பிரதிவாதியும் எத்தனை கையொப்பம் செய்தோம் என்று எனக்கு தெரியவில்லை. கிரைய ஒப்பந்தத்தில் சாட்சி கையொப்பம் செய்த ஒரு நபரைபிரதிவாதி அழைத்து வந்தார். மற்றொரு நபர் தற்செயலாக வந்திருந்தா ா

அவரை கையொப்பம் செய்யச் சொன்னேன். கியைர ஒப்பந்தத்தில் பிரதிவாதி அழைதது வந்த முனிஸ் என்பவரும, முத்துக்குமாரவேல் என்பவரும சாட்சி கையொப்பம் செய்தார்கள். நான் சொல்லும் இரண்டு நபர்களும் கியைர ஒப்பந் தத்தில் கையொப்பம் செய்வில்லை என்றும் யார் கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. சாட்சிகள் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்தார்கள். கியைர ஒப்பந் தத்தில் முனிஸ் என்பவர் முதலிலும், முத்துகுமாரவேல் இரண்டாவதாகவும் கையொப்பம் செய்தார். ரூ5,00,000/- எத்தனை ரூபாய் தாள்களாக கொடுத்தேன் என்றால் ரூபாய் 500,000/- தாள்களாக கொடுத்தேன். ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டதால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ரூபாய் கொடுக்காத காரணத்தினால் தான் எத்தனை ரூபாய் தாள்கள் எப்படி கொடுத்தேன் என்று என்னால் கூறமுடியவில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தில் உள்ள உணவகத்தின் அளவு பற்றி வழக்குரையில் கூறவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தில் உள்ள உணவகத்தின் அளவு பற்றி ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசாஆ.5 20.4.2023 என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.5 ஆனது வழக்கு பின்னீட்டு ஆவணம் என்றால் சரிதான். என் மனைவிக்கும் பிரதிவாதிக்கும் தவா சொத்துபிரிப்பது சம்பந்தமாக பிரச்சனை இருந்தது என்றும் அதை மனதில்வைத்து மோசடியாக கிரைய ஒப்பந்த பத்திரம் உற்பத்தி செய்யப்ட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூறுவது போன்று 15.04.2023 அன்றோ, 17.04.2023 அன்றோ எந்த ஒரு கிரைய ஒப்பந்தமும் நானும், பிரதிவாதியும் செய்யவில்லை என்றும், பிரதிவாதிக்கு நான் பணம் எதுவும் கொடுத்தில்லை என்றும், சொன்னால் சரியல்ல. என் மனைவியும் பிரதிவாதியும் செய்துகொண்ட பாகப்பத்திரத்தின் அசல் என் கைவசம் உள்ளது என்றால் சரிதான். அந்தபாகப்பத்திரத்தில் உள்ள பிரதிவாதியின் கையொப்பத்தை மோசடியாக இட்டு கிரைய ஒப்பந்தம் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. கிரைய ஒப்பந்தத்தில் உள்ள

பிரதிவாதியின் கையொப்பத்தை கையெழுத்து நிபுணர்க்கு அனுப்புவதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. நான் பொய்யான வழக்குமூலத்தின் அடிப்படையில் பொய்யான ஆவணங்களின் அடிப்படையில் இ ந்தவழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும், நான் கிரையம் முடிக்க தயாராகவும், விருப்பமாகவும் இல்லை என்றம், அதனால் தான் பாக்கி கிரைய தொகையை நாளது தேதிவரை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றும், நான் கோரும பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியதல்லஎன்றும் வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டி சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி,

இராஜபாளையம்.